**தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 3.1.1 3.1.2 மற்றும் 3.1.3 அட்டவணைகளில் அடங்கிய வருமானக் குறியீடுகள் தொடர்பான வருமானக் கணக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்டம்பர் 11 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால்

பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2.2.1 |
| | | 2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.4(அ) |
| | | 3. செயற்திட்டங்களில் நிறைவேற்றுவதில் தாமதம் | 2.1.2(அ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | செயதிட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.1.2(அ) |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்குகளில் குறைபாடுகள்<br>2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.4<br>2.5 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | வருடாந்த பொருள் மெய்மையாதலின் குறைபாடுகள் | 2.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும். | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.4 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விஷேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்குகள் தொடர்பான குறைபாடுகள><br>2. அரசாங்க உத்தியோகத்தர்களை முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.4(அ)<br>2.6(அ) |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்ப்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.1.2(அ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரசநிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 03 பிரதான கருமங்கள் காணப்பட்டதுடன் திணைக்களத்தினால் எதிர்பார்த்த விளைவுகளை பெறுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நாளதுவரை ஆக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது கடமையாற்றும் பதவியணி தொடர்பான விபரங்கள் சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் ஒவ்வொரு வருமான குறியீடுகளுக்காக வருமானங்கள் சேகரிக்கும் செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### 2.1.2 செய்பணிகளை நிறைவேற்றாமை

**(அ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| செயற்திட்டம் | மதிப்பீட்டு கிரயம் | ஆரம்பித்த திகதி | பூர்த்தி செய்த திகதி | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | ரூபா மில்லியன் | |
| சட்டமா அதிபர் திணைக்களத்திற்காக புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணித்தல் | 1,182.00 | 2015.12.08 | 2019.04.11 | 402.75 | பெறுகைக் குழுவை மாற்றுவதற்கு நேரிட்டமையால் ஒப்பந்த வேலை வழங்குவதில் தாமதம் ஏற்படல், மழை காரணமாக நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதில் தாமதமடைதல் என்பன நிர்மாண வேலையினை நேரசூசிப்படி மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரச சட்டவறைஞர் உத்தியோகபூர்வ வீடு நிர்மாணித்தல் (வவுனியா, மன்னார், குருநாகல், கண்டி) | 106.00 | 2015.06.15 | 2017.12.31<br>2019.04.11<br>(திருத்திய) | 36.49 | திணைக்களத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட பௌதீக மற்றும் மனித வளங்கள் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள 04 உத்தியோகபூர்வ வீடுகள் நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு போதியளவில் காணப்படாமையால் கண்டி மற்றும் குருநாகல் சட்டவுறைஞர் உத்தியோகபூர்வ வீடுகள் நிர்மாணிக்கும் அலுவல்கள் ஆண்டின் போது நிர்மாணிப்பதற்கு முடியாதிருந்தது. |

**2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்தல்**

2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் பந்தி 3.1.6 இன் பிரகாரம் 2018 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், திணைக்களத்தினால் அந்த அறிக்கை 2018 செப்டம்பர் 03 திகதி வரை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**2.3 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 450.8 | 450.7 | 0.1 | 0.0 |
| | மூலதன | 32.3 | 32.0 | 0.3 | 1.1 |
| | **மொத்தம்** | **483.1** | **482.6** | **0.5** | **0.1** |
| 2014 | மீண்டுவரும் | 496.7 | 496.3 | 0.4 | 0.1 |
| | மூலதன | 38.3 | 38.2 | 0.1 | 0.3 |
| | **மொத்தம்** | **535.0** | **534.5** | **0.6** | **0.1** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2015 | மீண்டுவரும் | 657.6 | 655.1 | 2.6 | 0.4 |
| | மூலதன | 610.5 | 91.1 | 519.4 | 85.1 |
| | **மொத்தம்** | **1268.1** | **746.2** | **521.9** | **41.2** |
| 2016 | மீண்டுவரும் | 671.1 | 657.4 | 13.7 | 2.0 |
| | மூலதன | 606.3 | 286.6 | 319.7 | 52.7 |
| | **மொத்தம்** | **1277.4** | **944.0** | **333.5** | **26.1** |
| 2017 | மீண்டுவரும் | 724.9 | 708.8 | 16.1 | 2.2 |
| | மூலதன | 635.0 | 235.0 | 400.0 | 63.0 |
| | **மொத்தம்** | **1359.9** | **943.8** | **416.1** | **30.6** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கிய ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 5,865,000 இற்காக மொத்த ஏற்பாடுகளும் பயன்படுத்தாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருத்தல்**

06 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்தமையால் ஏற்பாடுகள் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயங்கள் தொடர்பாக தேறிய ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சு அளவினை கொண்டிருந்தது.

### 2.4 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

திணைக்களத்தினால் 2017 ஆண்டிற்கான வருமானக் குறியீடு 20.03.02.11 இற்கான கூட்டுத்தொகை ரூபா 40 மில்லியன் தொகைக்கான வருமான மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 32.4 மில்லியன் வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 81 சதவீதம் ஆக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) 20.03.02.11 கொண்ட வருமானக் குறியீடு - கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சபைகளில் சட்ட கட்டளை வருமானம்**

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 221.60 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை 01 வருடம் முதல் 10 வருடங்களை விட மிகையான கால வீச்சு தொடர்பானது. நிலுவை வருமானத்தை அறவீடு செய்தவற்காக திணைக்களத்திற்கு இயலாதிருந்தது.

## 2.5 அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 229 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 23.00 | 21.79 | 14.00 | 16.68 | 80.00 | 49.01 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதிய உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்று சென்றுள்ள உத்தியோகத்தர்களுக்கான கடன் மீதிகள் தவிர ரூபா 1,581,316 தொகையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி 04 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையான கால வீச்சு முதல் காணப்பட்ட போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2017 ஜுலை 05 ஆம் திகதிய 256/2017 இலக்கம் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், நிறுவனத்தினால் கட்டுப்பாட்டு கணக்கு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை காலாண்டிற்கு ஒன்று என 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### 2.7.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேலே 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் பதவியணி மிகை மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனச் செலவின தொகுதிக்காக ரூபா 452,265,951 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 503 | 207 | 296 |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 10 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 297 | 118 | 179 |
| (iv) | ஆரம்ப நிலை | 407 | 224 | 183 |
| | மொத்தம் | 1,220 | 559 | 661 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பதவியணி வெற்றிடங்கள் காணப்படல்**

அனைத்து இலங்கை மக்களுக்கும் நீதி மற்றும் நியாயம் வழங்குதல் மற்றும் ஆக்கபூர்வமான பதில் அளிக்கும் செயன்முறையில் முதன்மையாளராக செயற்படும் தூர நோக்கின் மீது அடிப்படையாகக் கொண்ட குறிக்கோள்கள் மற்றும் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக நேரடியாக பங்களிப்பு ஒன்றினை வழங்கும் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை பதவியணி 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை 516 தொகையாக காணப்பட்டதுடன் உள்ளவாறான எண்ணிக்கை 217 ஆக காணப்பட்டமையால் வெற்றிடங்கள் 299 காணப்பட்டது. அவை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 58 சதவீதத்தை கொண்டிருந்தது. இவ் விடயம் நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு நேரடிப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதாக இருந்ததால் திணைக்களத்தின் அலுவல்கள் தடைகள் ஏதும் இன்றி நடாத்திச் செல்வதற்காக தேவைப்படும் பதவியணியினை இனங்கண்டு அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பதவியணி பயிற்சி வழங்கள்**

பதவியணிக்கு அடிக்கடி பயிற்சி வழங்க வேண்டிய தேவை காணப்பட்ட போதிலும் திணைக்களத்தின் பதவியணிக்கு பயிற்சி வழங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கடந்த 05 வருடங்களில் பயிற்சி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | மீதி சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 2013 | 8,000,000 | 8,000,000 | --- | -- |
| 2014 | 19,000,000 | 18,914,468 | 85,532 | 0.5 |
| 2015 | 34,500,000 | 19,175,350 | 15,324,650 | 44 |
| 2016 | 16,000,000 | 14,063,237 | 1,936,763 | 12 |
| 2017 | 41,500,000 | 38,614,109 | 2,885,891 | 7 |
| | 119,000,000 | 98,767,164 | 20,232,836 | 17 |

(ii) திணைக்களத்தில் மொத்த பதவியணியினர் 559 தொகை எனினும் அவற்றில் எவ்வித பயிற்சியும் வழங்கப்படாத 469 பதவியணியினர் உள்ளனர். அவை மொத்த பதவியணியின் 84 சதவீதத்தை கொண்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது பயிற்சி வழங்கும் அலுவல்களுக்கு ஒதுக்கியிருந்த தேறிய ஏற்பாடுகள் 93% சதவீதமும் பதவியணியின் 90 அதாவது 15 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.8 அரச உத்தியோகத்தர்களிள் பிணை வைத்தல்

நிதிப்பிரமாணங்கள் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 04 பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் கடமையாற்றிய போதிலும், திணைக்களம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.